# கிழக்கில் படையினரின் சோதனை நடவடிக்கைகளை அதிகரிக்க முடிவு

(கொழும்பு) வடிக்கைகளை அதிகரிப்பதற்கு
கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு அமைச்சு தீர்
படையினரின் சோதனை நட (5ம் பக்கம் பார்க்க)


விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 23 இதழ் 2:0
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 08 — 09 — 1992


## படையினரிடம் சிக்கிய மக்களின் நிலை

(யாழ்ப்பாணம்)
வலிகாமம் பகுதியில் படையினரிடம் சிக்கியுள்ள பொது மக்கள் இரவில் ஓரிடத்தில் கூடி ஒன்றாக நித்திரை செய்வ
[5-ம் பக்கம் பார்க்க]

## கடற்படையினர் உஷார் நிலையில்

(கொழும்பு)
வடபகுதியில் கடமைபுரியும் கடற்படையினர் 24 மணி நேரமும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக பாது
[5ம் பக்கம் பார்க்க]

## வலிமேற்கு தாக்குதல்; நிவாரண வெட்டு:

# தமிழர்பிரச்னையைத்தீர்க்க அரசு ராணுவ முடிவையே நாடுகிறது!

## சர்வதேச நாடுகள்கண்டனம்!!

(கொழும்பு)
வடக்கு கிழக்கு சம்பந்தமான பிரச்னையில் இலங்கை அரசு அண்மைக் காலமாகக் கடைப்பிடித்துவரும் கொள்கைகளும், மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளும் அரசு அரசியல் சமாதான முறைகளைக் கைவிட்டு இராணுவத் தீர்விலேயே அதிக அக்கறை கொண்டிருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்களும், இலங்கைக்கு உதவி வழங்கும் வெளிநாடுகளும், நிதி வழங்கும் ஸ்தாபனங்களும் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளன. (5ம் பக்கம் பார்க்க)

## நிவாரண வெட்டை எதிர்த்து நாளைநடைபெறும் ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)
வடக்கு கிழக்கு பகுதியில் இடப்பெயர்ந்த அகதிகளுக்கான நிவாரணத்தை அரசு குறைத்துள்ளதைக் கண்டித்து வெகுஜன அமைப்புகள் நடத்தும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நாளைக் காலை 10-00 மணிக்கு நல்லூர் ஆலய முன்றலிலிருந்து
(6ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு அரசியல் தீர்வு உடன் தேவை

(கொழும்பு)
வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு உடனடியாக அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை வகுக்க வேண்டியது அவசியமாகும் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த அரசியல் தீர்வில் மக்கள் பங்கேற்கக்கூடியதாகவும்
(6ம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதம் உருவாக ஐ.தே.க. அரசே பொறுப்பு!

### அனுரா குற்றச்சாட்டு

(குளியாப்பிட்டிய)
''ஐக்கிய தேசிய கட்சியே பயங்கரவாதத்தை உருவாக்கியது, பயங்கரவாதத்தினால் பயன் பெற்றதும் ஐ.தே. கட்சியே''.

வாரியப்பொலவில் அண்மையில் நடந்த கூட்டமொன்றில் உரையாற்றிய திரு. அனுரா பண்டாரநாயக்கா இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது:

வேண்டத்தகாத ஒரு நிலைமையிலேயே திரு. பிரேமதாசா ஜனாதிபதியானார். இல்லையேல் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவே ஜனாதிபதியாகியிருப்பார்.

திரு. பிரேமதாசா ஜனாதிபதியானபின் ஆயுதந்தரித்த குண்டர்கள் மூலம் அரச பயங்
(6-ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி தேர்தல் வழக்கு: சிறிமா 9லட்சம் ரூபா செலவுத் தொகை செலுத்தவேண்டும்

[கொழும்பு]
ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேப வழக்கு விசாரணைகளின் செலவுத் தொகையாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா சுமார் 9 லட்சத்து 6 ஆயிரம் ரூபாவை செலுத்த வேண்டிவரும் என கொழும்பு அரசியல்வட்டாரங்கள் செய்தி வெளியிட்டன.

மேற்படி வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடிசெய்யப்பட்டது தெரிந்ததே. (க)

## இரதோற்சவ சிறப்பு மலர்

(யாழ்ப்பாணம்)
தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தில் இன்று நடைபெறும் இரதோற்சவத்தை முன்னிட்டு உள்ளே சிறப்பு மலர் வெளியிடப்படுகிறது.

-நிர்வாகி

## அரசியல் லாபம் தேடும் கட்சிகள்

(கொழும்பு)
இனப்பிரச்னையை வைத்துக்கொண்டு அரசியல் இலாபம் தேடும் முயற்சியில் தெற்கிலுள்ள பல அரசியல் கட்சிகள் ஈடுபட்டுள்ளன

அரசியல்வாதிகள் சிலர் நாட்டின் தேசிய நலன்களில் சற்றேனும் அக்கறையற்றவர்களாக பிரச்னைகளைமேலும் பிரச்னைகளாக்கி அதில் சுயஇலாபம் தேடவே முனைகின்றனர்.

இதன் காரணமாகவே நாடும் மக்களும் சீரழிந்து செல்ல வேண்டிய இக்கட்டான நிலை இன்று தோன்றியுள்ளது என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளார். [ரி]

## வனம் வளர்த்தால் வானம் நீர் வார்க்கும்

## வடபகுதி தளபதியாக லக்கி அங்கம நியமனம்?

(கொழும்பு)
கிழக்குப் பிராந்திய இராணுவதளபதியாக கடமையாற்றிவரும் மேஜர் ஜெனரல் லக்கி அங்கம வடபகுதி இராணுவ தளபதியாக நியமிக்கப்படவுள்ளதாக இராணுவ உயர்பீடத்துடன் நெருங்கிய தொடர்புள்ள அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதுவரையில் வடபிராந்திய
[6ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### நோவு வைத்தியம்

ஓட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெ கிடைக்குமிடம் எஸ் ரீ மெடிக்கல்ஸ், 490. ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். (சி-6669)

### விற்பனைக்கு

இறக்குமதி செய்யப்பட்ட பீற்றூட் விதைகள் விற்பனைக்குண்டு (100 g ரின்) சனி ஞாயிறு தினங்களில் வீட்டிலும் பெற்றுக்கொள்ளலாம் 07, கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதி நல்லூர். தொடர்பு: பிள்ளையார் 251 கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சி-6782)

## ஏற்புதடுப்பூசி தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

மானிப்பாயில் இயங்கிவரும் தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் ஏற்பு தடுப்பூசி மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (72)

### வாசிப்போர் தேவை

பார்வையற்றோருக்கு முற்று முழுதாக சேவை அடிப்படையில் தமிழ் புத்தகங்கள் வாசிக்கக் கூடியவர்கள் உடன் தேவை. கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும். முகவரி: A. பரமேஸ்வரன், C/o A S. ஆறுமுகம், சட்டநாதர் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (சி-6763)

## காரைதீவு
# அகதி முகாமிலிருந்துசென்ற பதினறு பேரை காணவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - காரைதீவு அகதி முகாமிலிருந்து வெவ்வேறு இடங்களுக்கு சென்ற 16 தமிழர்கள் சய்ந்தமருதுவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தின் பின்னர் காணாமல் போயுள்ளனர்.

மேற்படி 16 பேரும் அம்பாறை, மல்வத்தை வளாத்தாப்பட்டி ஆகிய இடங்களை சேர்ந்தவர்கள், கடந்தகால வன்செயல்களையடுத்து காரைதீவு அகதி முகாமில் வாழ்ந்து வந்தவர்கள்.

இதேவேளை குண்டுவெடிப்பு நடந்த தினத்தில் காணாமல் போன காரைதீவை சேர்ந்த மா. தம்பிராசா (58 வயது) என்பவரின் அடையாள அட்டை மாத்திரம் கல்முனையில் உள்ள தேசிய புலனாய்வுக் குழுவுக்கு கிடைத்துள்ளது. இவருக்கு என்ன நடந்தது என்பது பற்றி எதுவும் தெரியவில்லை. (சி)

## யாழ்.
# செஞ்சிலுவைச் சங்கதேர்தல் 13ல் நடைபெறும்

(வேலணை

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் வருடாந்த தேர்தல் இம்மாதம் 13ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றது.

14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த பிரிவுக் கிளைகள் அனைத்திலும் நடைபெற்ற தேர்தலில் தலைவர் செயலாளர்கள், தனதிகாரிகள் உட்பட மற்றும் நிர்வாகத்திற்கும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அடுத்து யாழ் கிளையின் தலைமை அலுவலகத்தின் தேர்தலின்போது 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இருந்து கலா 30 உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள். (75)

## இராசி பலன்

08-09-1992
செவ்வாய்க்கிழமை
(தமிழுக்கு ஆவணி 23)

துவாதசி பி இ 2 19 வரை உத்தராடம் பி ப. 1 40 வரை சித்தயோகம் இராகுகாலம் மாலை 3.03 முதல் 4 33 வரை, சுபநேரம் காலை 10 33 முதல் 12.03 வரை.

மேடம்: பந்துவரவு தொழிலில் லபம் அதிகபிரயாசம்

இடபம்: காரியநஷ்டம் இடமாற்றம் செலவு.

மிதுனம்: அவநம்பிக்கை, துக்கம் வாக்குப்பகை.

கடகம்: போசனசுகம் தனலாபம் மனைவி பெருமை

சிங்கம்: முயற்சி டலிதம், குடும்ப சுசம் தெய்வீக செலவு

கன்னி: பலவீத உபத்திரவம் குடும்பபிரிவு கவலை

துலாம்: சத்துருபயம் காரியத் தடை அலைச்சல்.

விருச்சிகம்: எதிர்பாராத உதவி கடன்வசூல் வெற்றி.

தனுசு: உடல்நலக் குறைவு மனசுமை வெறுப்பு

மகரம்: ஜனசனமகிழ்ச்சி, தாய்ப்பாசம் புதியபதவி.

கும்பம். ஏமாற்றம் வழித்தொல்லை கடன்.

மீனம்: பதவி உயர்வுகுடும்ப சந்தோசம் புதிய நட்பு.

— ஜோஸ்யர்

நல்லூர்

## ஆவணி ஓணத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் புதுரோட் சிதம்பரமூர்த்தி கேணியடி ஞானவைரவர் ஆலய ஆவணி ஓணத்திருவிழாவை முன்னிட்டு யாழ் நகர் பஸ்நிலைய ஞானவைரவர் ஆலயத்தில் நாளை பிற்பகல் 2 மணிக்கு சங்காபிஷேகமும், சமயச் சொற்பொழிவும் விசேட நாதஸ்வர தவில் கச்சேரியும் பக்தி பாடல் நிகழ்ச்சியும் நடைபெறும்.

2-30 மணிக்கு நாதஸ்வர தவில் கச்சேரி, 5-30 மணிக்கு சமயச் சொற்பொழிவு-காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர் த. சிவகுமாரன், 6-15 மணி முதல் 12 மணி வரை நாதஸ்வர தவில் கச்சேரி, 12 மணிக்கு 'சாந்தன் குழுவினரின்' பக்திப்பாடல் இசை நிகழ்ச்சி. (சி)

## தொண்டர் ஆசிரியர்நியமனம்

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தர நியமனம் செய்வது சம்பந்தமான இறுதி முடிவு செய்வதற்காக யாழ் பிரதேச கல்விப்பணிப்பாளரை கல்விச் சேவைச் சடையின் செயலாளர் கொழும்புக்கு உடனடியாக வருமாறு அழைத்துள்ளார்.

1992 க.பொ.த. (உயர்தர) பரீட்சை விடைத்தாள் கொண்டு செல்லும் கல்விப் பணிப்பாளர் மேற்படி நியமனம் சம்பந்தமான கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளார்.

## முதலாவது பிறந்ததின வாழ்த்து

செல்வன் தினேஷ்குமார்

இல. 82/11, பருத்தித்துறை வீதி, 3-ம் ஒழுங்கை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சந்திரமோகன் விஜிதா தம்பதிகளின் அருமைப் புதல்வன் செல்வன் தினேஷ்குமார் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (1992-9-08) தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, மம்மாமார், ஜெர்மனியிலுள்ள அம்மப்பாமார், பாட்டிமார், பாட்டன்மார், மாமாமார், அத்தைமார், அன்ரிமார், அத்தான்மார், மச்சிமார், பெரியம்மாமார், பெரியப்பாமார், அக்காமார், அண்ணாமார் மற்றும் உறவினர்கள் நல்லூர்க்கந்தனின் அருளுடன் சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகிறார்கள்.

த. சந்திரமோகன்
(தந்தை)


(சி-6779)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
உடுப்பிட்டி
25-03-1910

★

உதிர்வு:
சங்கானை
21-08-1991



அமரர்
## ஆறுமுகம் ஞானப்பிரகாசம்

(பிரதம கணக்காளர், கூ. மொ. வி. இலாகா)

வருடம் ஒன்று கடந்தாலும் துயரம் இன்னும் ஓயவில்லை. ஆண்டு பலதான் சென்றாலும் குடும்ப ஒளி விளக்கே உங்கள் நினைவு நம் உயிர் உள்ளளவும் நீங்கா.

பண்பின் உறைவிடமாய், பிறர் மனம் கோணா வாழ்ந்து காட்டிய உங்கள் திருமுகத்தை நம் நெஞ்சில் இருத்தி ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனர்.

''இரத்தினமகால்'',
பிரதானவீதி,
சங்கானை.

(சி-6772)

# இணைந்தோம் இருமனம்

அன்புடையீர்!

நிகழும் ஆங்கீரச வருடம் ஆவணித் திங்கள் 24-ம் நாள் (09-09-1992) புதன்கிழமை காலை 8.38 மணி தொடக்கம் 10.30 மணி வரையுமுள்ள சுப முகூர்த்த வேளையில்

| | | |
|---|---|---|
| எமது ஏக புத்திரன் திருநிறை செல்வன் **சத்தியரூபன்** (உரிமையாளர், நதியா ஜுவல்லர்ஸ்) யாழ்ப்பாணம் அவர்களுக்கும் | ★ ★ ★ ★ ★ ★ | எமது புத்திரி திருநிறை செல்வி **விஜயகுமாரி** (லதா) அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் திருமாங்கல்ய தாரண வைபவத்தில் தாங்கள் தங்கள் சுற்றஞ்சூழ வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்தேகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

★ இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. த. நடராசா
செல்லத்துரை (மருமகன்) குடும்பத்தினர்
பூதவராய் வீதி, திருநெல்வேலி கிழக்கு,
நல்லூர்.

திரு. திருமதி செ. வீரசிங்கம்
(சிறி அமலா ஜுவல்லரிஸ்
198/5, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


(இரு வீட்டார் அழைப்பு)

அன்று மாலை 4.00 மணியளவில் மணமகன் இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்தில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

(சி 6781)

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி இரதோற்சவம்

## சிறப்பு மலர் - 1992



ஆவணியிலே உத்தராட நாள் தேரேறி
அருளோணம் தீர்த்தம் நல்கும்
அமுதமே நமசிவாய அழகியே
தெல்லியூர் ஆதிதுர்க்கா தேவியே.

— அருட்கவி சீ. விநாசித்தம்பி.

துர்க்கை என்றால் என்ன? து. உ, கு. க. ஆ. என்ற எழுத்துக்களின் கூட்டு உச்சரிப்பில்தான் 'துர்க்கா' என்ற திருநாமம் வெளிப்படுகின்றது. அவள் சர்வநாசினி என்பதை விளக்கிடவே 'ஆ' என்ற முடிவு எழுந்து நாசத்தைக் குறிக்கின்றது.

அசுரர்கள், தடங்கல்கள், வியாதிபாவங்கள் மற்றும் பயத்தைப் போக்கிடும் சக்தி வாய்ந்த எழுத்துக்கோர்வையாகும் 'துர்க்கா' என்ற திருநாமம். அர்த்தமே துர்க்கைதான்.

அன்பு என்றதற்கு உருவம் கொள்டவள் துர்க்கைதான், ஞானம் என்றால் அதன் இருப்பிடமே துர்க்கையென்றும் நீங்காத நினைவுகள் அவள்தான் என்றும், மாலையில் இருந்து தம்மை விடுவித்து ஞானஒளிக்கு அழைத்துச் செல்லும் ஒளிப்பிளம்பு அன்னை துர்க்காம்பிகா தான்.

அருள், பொருள் ஆனந்தம் என்ற மூன்று அடிப்படைத் தேவைகளை அளித்திடும் மாகாளி மஹாலட்சுமி, மஹாசாகிரீயான ஞானசக்தியை அளித்திடும் வரம்பெற்றவள் துர்க்கை. தொன்று தொட்டு வழக்கிலிருந்து வரும் சக்தி வழிபாட்டின் முறைகளை ஆகமங்களும் சாஸ்திரங்களும் புராணங்களும் முக்கியத்துவம் அளித்து வழங்கிவருவதற்கான காரணம்சக்தியின்றி எதையும் செய்யஇயலாது என்ற உண்மையால் தான். பிரம்மா விஷ்ணு சிவனின் இயக்கமே அவர்களைச் சார்ந்த பிராமி,

## துர்க்கையின் கருணை கடல் போன்றது

## அழிப்பதற்காக மட்டும் துர்க்கையம்சமல்ல

தேவி புராணங்கள் மற்றும் தந்திரங்களில் துர்க்கையென்றும் ஓர்பெரும் சக்தியில் பல விதமான சக்தியிருக்கின்றதென்றும். அன்னை துர்க்கா சமயத்துக்கேற்ப காளியாகவும், பார்வதியாகவும், அம்பிகையாகவும் மற்றும்பலரூபங்கள் கொண்டு ஆங்காங்கே தோன்றி அசுரத்தனமான கொடுமைகளைக் களைந்து வருகின்றாள் ஒவ்வொரு வடிவமும் ஒரு பிரத்தியேகமான காரியத்திற்காகவேஏற்படுகின்றதென்பதை சில சம்பவங்களிலிருந்து புரிந்துகொள்ளலாம்.

விந்தியபர்வதம் அகத்திய முனிவர் முன்பு வானளாவி நின்றபோது அவர் வனதுர்க்கையின் சக்தியைதான் வேண்டினார் என்றும் திரிபுராசுரனை வென்று வீழ்த்திட சிவபிரான் சூலினி துர்க்கையை வேண்டினார் என்றும், குமாரசம்பவத்தில் ஜாதவேதம் என்ற துர்க்கை ஈசனின் நெற்றிக்கண்ணிலிருந்து வெளிப்பட்ட தீப்பொறியைத் தனது கையால் தாங்கி கங்கையில் விட்டாள் என்றும், தட்சனின் யாகத்தால் கோபம்கொண்டு ரௌத்திர தாண்டவமாடி உமையவளையே அழித்திட முற்பட்டபோது ஈசனை சமாதான நிலைக்குக் கொண்டு வந்தவள் சாந்தி துர்க்கையென்றும் புராணங்கள் கூறுகின்றன.

சமயத்துக்கேற்றாற்போல் உருவங்கொண்டு காத்திட வந்திடுபவள் அன்னைதுர்க்கை. துர்க்கையின் கருணை கடல் போன்றது. அழிப்பதற்காக மட்டும் துர்க்கையம்சம் என்ற எண்ணம் தவறானது.

அழகு என்ற சொல்லின் சரஸ்வதியின் முக்கூட்டலே துர்க்கையின் வடிவமாகும்.

வடக்குநோக்கி அருளாட்சி புரிந்திடும் சாந்திதுர்க்கையைத்தான் கோயில்களின் வெளிப்பிரகாரங்களில் காணலாம். எருமைவாகனத்தில் சங்கு, சக்கரம், கதை, கத்தி, கலப்பை, உலக்கை, கேடயம், தோமரம், கோடாரி, கயிறு, குத்தாயுதம், திரிசூலம் ஒப்புயர்வற்ற சாரங்கம் என்னும் வில்லுடன் துர்க்காதேவி காட்சிதருகின்றாள். தேவியின் நவாமந்திரங்களில் ''ஐம் ஹ்ரீம் க்லீம்'' என்ற முதல் மூன்று பீஜமந்திரங்கள்

நாராயணி, மகேஸ்வரி என்ற சக்திகளின் இயக்கமேயாகும். இவர்களைத்தவிர கௌமாரி வாராஹி, இந்திராணி சாமுண்டி என்ற சக்திகளுடன் சேர்ந்து துர்க்கையின் ஏழுநிலைகளாக விளங்குகிறார்கள்.

பிரம்மாவில் இருந்து பிராமி மகேஸ்வரனிடமிருந்து மகேஸ்வரி, சுப்பிரமணியரிடமிருந்து கௌமாரி, விஷ்ணுவிடமிருந்து நாராயணி, வராகனிடமிருந்து வாராஹி, இந்திரனிடமிருந்து இந்திராணி என்ற

**- ஐயா சச்சிதானந்தம் -**

முறையே ஞானத்தை அளித்திடும் ''சித்'' செயல்படும் பொருளை வழங்கிடும் 'சத்' மற்றும் இன்பத்தை அளித்திடும் ''ஆனந்தம்'' என்னும் சக்திகளைக் குறிக்கின்றன அவைமுறையே மஹாசரஸ்வதி மஹாலட்சுமி மற்றும் மஹாகாளி என்னும் உருக்கொண்டு வெளிப்படுகிறார்கள்.

அதனாலேயே சச்சிதானந்தத்தைப் பெற்றிட இம்மூன்று தேவியர்களையும் வழிபடும் மரபு ஏற்பட்டு ஒவ்வொரு தேவிக்கும் மும்மூன்று நாட்கள் என்று பகிர்ந்து நவராத்திரி வைபவம் துவங்கியது. மாகாளியை மையத்தில் கொண்டு லட்சுமிசரஸ்வதியை இருபக்கத்திலும்வைத்துபூஜை நடக்கின்றது.

சச்சிதானந்தம் மற்றும் இச்சக்தியாய் துர்க்கை வெளிப்பட்டு அவரவர் செயல்பட அருள்பாலிக்கின்றாள்.

துர்க்கா, சரஸ்வதி, மஹாலட்சுமி, சாமுண்டி, காளிஎன்று எந்த வடிவிலும் அன்னையை வழிபடலாம். அவள் எங்கும் நிறைந்தவள் என்பதால் எந்த வடிவத்திலும் நம்மைத் துன்பத்திலிருந்து காத்திட வந்திடுவாள். மஹாபலம்பொருந்தியவளே துர்க்கை. கொடிய பயத்தைப் போக்குபவள் அவள். சத்துருக்களுக்குப் பயத்தை வளர்ப்பவள். அவள் காட்சிக்கரிய தேவியவள். எம்மைக் காத்தருள வேண்டி அவள்பாதம் தொழுவோம்.

## தெல்லி நகர்த் துர்க்கை சித்திர தேரேறி வருகிறாள்

ஆவணி மாதம் என்றால் எங்கள் தாயின் மகோற்சவ காலமாகும். எல்லார்க்கும் இனிய காலம்; திவ்யமான தவக்காலம்; உலகமெங்கணும் துர்க்கையின் அடியவர்கள் விரதமிருந்து வழிபாடு செய்யும் காலம்; கோயிற்சூழலும் சாலைகளும் புனிதமாகக்காட்சி தருங்காலம்; தெல்லிப்பழை இந்து இளைஞர்கள் புலர்வதன் முன் அலகிட்டு நீர் தெளித்து தோரணங் கட்டி, வாழை

யும் காவடி ஆட்டமும் கற்பூரச்சட்டி எடுத்தலும் பிரதிட்டை பண்ணலும், அடி அளித்தலும், ஆடிப்பாடி பஜனை செய்தலும் இந்நாட்களில் கண்கொள்ளாக் காட்சிகளாக அமைபவை.

கொடியேறி மகோற்சவம் நடைபெறும் ஆலயங்களிலெல்லாம் தேர்த்திருவிழாவும் தீர்த்தத் திருவிழாவும் மிக முக்கியமானவை. தேர் வடம் பிடித்தும், தேங்காய்

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

நாட்டி மகிழுங்காலம்; இந்தக் காட்சியும் அனுபவமும் எமது பேச்சுக்கும் எழுத்துக்கும் அப்பாற்பட்டவை.

ஆவணி உத்தராடம் இவ்வாலய ரதோற்சவ காலமாகும். திருவோணம் தீர்த்தோற்சவ காலமாகும் நம் நாட்டின் நாலா திசைகளிலிருந்தும் பக்தர் கூட்டம் வந்து குவிகின்ற காட்சி.

உடைத்தும் திருப்தியடைவோர் பலர்; தீர்த்த நீர் தெளிப்பித்து ஆனந்தமடைவோர் பலர். இவ்வாண்டும் வழமைபோல் துர்க்காதேவியின் மகோற்சவம் சிறப்பாக நிகழ அவளுடைய பெருங் கருணை வழிகாட்டியதை எண்ணி எண்ணி உள்ளம் உருகிப் பிரார்த்தித்து நிற்போமாக.

## தேர் விழாவின் மகிமை

ஆலயங்களிலேயுள்ள அம்சங்களில் தூரத்திலுள்ளோரையும் கவரவல்லன கோபுரமும் தேருமேயாகும். இவற்றுள் தேருக்கு பல தனிச்சிறப்புகள் உண்டு. கோபுரம் அசையாது நிலைத்து நிற்பது. தேரீ ஆண்டுக்கொருமுறை தன்னையும் அலங்கரித்து அலங்காரத்துடனான தேவியையும் தாங்கி பக்தர்களை நோக்கி வலம் வருகிறது. தேரிலே அம்பாள் வீதி வலம் வருவது தனி அழகாயாம். தேரேறும் தேவியைக் காணும் வாய்ப்பினைபெறற எவரும் வைத்தகண் எடுக்க விரும்புவதுமில்லை.

சமயஉட்கருத்துக்கள்எவையாயிருப்பினும் தேர்த்திருவிழாவைப் பொறுத்தமட்டில் வெளிப்படையான சில சமூக நலன்கள் இருப்பதையும் காண்கிறோம். தேர் வடத்தை எல்லோரும் சேர்ந்துஇழுக்கும் போது இறைவன் சந்நிதியில் எல்லோரும் சமன் என்ற ஏற்றத்தாழ்வு அற்ற உணர்வு ஏற்படுகின்றது. பெண்களும் ஆண்களும், சிறுவர்களும், பெரியோர்களுமாக பலரும்சேர்ந்து வடத்தை இழுக்கும்போது தேர் நகர்கின்றது. இதன மூலம் கூட்டு முயற்சியின் முக்கியத்துவம் புலனாகின்றது.

இன்றுள்ள அமைதியற்ற நிலைமை நீங்கவும் நாடெங்கும் அமைதியும் நன்மையும் நிலவவும் அருளுமாறு தேரேறி எழுந்தருளிவரும் எல்லாம் வல்ல துர்க்கையின் திருவருளை வேண்டுவோமாக.

கி. லக்ஷ்மணஐயர்
வித்தியாதிபதி,
கல்வி அமைச்சு.

## ஊரிலே உயர்ந்தது தேர் விழாவே

ஊரெல்லாம் கோயில்; உணர்வெலாம் தெய்வபக்தி
நீரெல்லாம் தீர்த்தம்; நிழலெல்லாம் மண்டபங்கள்
ஊரில் விழாக்கள்; உயர்தெய்வம் போற்றுகின்ற
சீர்விழவே அந்தத் திருவிழா தம்முள்ளே
தேர்விழா என்றால் சிறப்பாம்; பொதுமக்கள்
நேரிலே கண்டு நிறையின்பம் கொள்விழா;
கோயிலுக்குள் எல்லாக் குலத்தினரும் ஆசையுடன்
தோயுமன்பி னேடுவடம் தொட்டிருக்கச்—
செய்விழாவாம்.

கலாநிதி கி. வா. ஜகந்நாதன்

"தேரோடும் தேவியே தேம்பியழும் எம்மினத்தை காத்தருளும் தாயே!!"

**துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்**

(புகழ்பெற்ற புத்தக வியாபாரிகளும்
புதினப் பத்திரிகைகளின்
பிரதம முகவர்களும்)


பஸ்நிலையம் முன்பாக,
சுன்னாகம்.

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி இரதோற்சவம்

## ★ சிறப்பு மலர் - 1992 ★

## காத்தருளும் அன்னை இன்று தேரேறி வந்து அருளும் நாள்

தெல்லிப்பழை யூரினை நினைத்ததும் உடன் எல்லோருடைய நினைவுக்கும் வருவது துர்க்காபுரத்தில் அருளாட்சி



செய்யும் அன்னை துர்க்காதேவி யின் நாமமே. அந்த அளவிற்கு இன்றைக்கு உலகெங்கணும் அவரின் கருணைக்கடாட்சம் பரந்து நிற்கிறது. வல்வினையகற்றி மக்களை மாயை இருளினின்றும் காத்து இனிய நல்லூராக தெல்லியூரில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ துர்க்கா தேவியின் திருக்காட்சியைக் காண கண் ஆயிரம் வேண்டும் சீறும் சிங்கத்திலே சிங்காரித்த ஸ்ரீ துர்க்கையைக் காண்பவர் கண்கள் கனகாலம் வாழும். இது சண்கூடு. கல்வி, செல்வம், வீரம் முக்கொடைக்கும் முதலான அம்பாள் வீரத்தின் வடிவாகத் தெல்லியூரில் குடிகொண்டு அயலூர், கவ்வூர் மக்களைக் கேடுகோலிலிருந்து காத்தருளி வருகின்றுள். அம்பிகையின் அவதாரங்களின் சிறப்பை அபிராமிப் பட்டர் தாது அபிராமி அந்தாதியில்:

"தனந்தரும் கல்வி தருமொருநாளுந் தளர்வறியா மனந்தருந் தெய்வவடிவுந் தரும்; நெஞ்சில் வஞ்சமில்லா இனந்தரு நல்லன எல்லாம் தருமன்பரி என்பவர்க்கே; கனந்தரும் பூங்குழலாள அபிராமி கடைக்கண்களே" எனக் கூறக்கண்டேன். "அன்னையே பின்னையும் சன்னியென மறைபேசும் ஆனந்த ரூபயில்லை" என்று பாடுகிறார் தாயுமானவர். சக்தியின் வழி

**எஸ். கே. யோகநாதன்**

பாட்டை மந்திர சாஸ்திரங்கள் மிக விரிவாகக் கூறுகின்றன. பிரபஞ்சத்தை இயக்கும் கண் காணுதோரி தெய்வீக ஆற்றலை சக்தியாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. மனிதன் தன்னுள் உறங்கிக்கிடக்கும் சர்வ வல்லமையான ஆற்றலை எழுப்பிக் கொள்வதையே இந்த மந்திர சாஸ்திரம் விளக்குகிறது ஈழநாட்டில் சரித்திரப்புகழ்பெற்ற எத்தனையோ ஆலயங்களில் சித்திரத்தேர்கள் அமைக்கப்பட்டுள்ள போதும் தெல்லிப்பழை துர்க்காபுரத்தில் கோயில்

[5ம் பக்கம் பார்க்க]

## தேர் உற்சவத்தின் தத்துவ விளக்கம்

ஆலயங்கள் அமைத்து சைவம் காத்த எமது மக்களுக்கு கோபுரமும்தேரும் புதியனவல்ல. எனினும் தேர் ஒன்று எப்படி அமைய வேண்டும என்பது பற்றி சிந்தித்து அழகாகவும் சமய தத்துவங்களுக்கு அமையவும் சமூக தத்துவத்தை ரிவரப் பின்பற்றியும் அமைந்ததால் ஸ்ரீ துர்க்காதேவியின் திருத்தேர் மகிமை பெறுகிறது.

பூமியை ஆண்டவன் தன்ரதமாகக் கொண்டிருக்கிறுன். அதனை நான்கு வேதங்களும் ஆன, நான்கு குதிரைகளும் இழுக்கின்றன. பிரமனே தேர்ச் சாரதியாவான். சூரிய சந்திரர்களே தேரின் சக்கரங்களாகின்றனர். சூரியன் அசுத்தத்தைப் போக்குவது. சந்திரன் இன்பத்தை உண்டாக்குவது. மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயைகளை அழிப்பதற்கே தேர் ஊர்ந்து செல்கிறது.

பலரும் சேர்ந்து வடத்தை இழுக்கிறோம். இது எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டியதன் அவசியத்தை போதிக்கிறது. எட்டுத்திக்குகளிலும் மேலும் கீழுமாக பத்துப் பக்கமும் பரந்து நின்று ஆளுபவள் என்பதையே சக்தியின் பத்துக் கரங்களும் போதிக்கின்றன.

தேர் வடம் பிடிப்போம் அதன்மூலம் முத்தி இன்ப வீட்டில் நித்த இடம் பிடிப்போம். துர்க்கையைப் போற்றுவோம்!

சபா புஷ்பநாதன்

### அன்னையின் சக்தி

மறைந்த நகைகள் மாயமாய் திரும்பியதும்
துர்க்கையே நின் தூய்மை கண்டோம் - அங்கு
குண்டுபோட்டவன் குண்டாலே மடிந்ததும்
அன்னையே நின் சக்தி கண்டோம் - தெருவிலே
தேம்பியழும் எம்மினத்தை காக்கவின்று
தேவியே உன்னை தேரில் கண்டோம்.

ஜனனி & ஷாலினி

### தெல்லியூர் வளர்கின்ற திருச்செல்வியே!

ராகம்: ஆனந்தபைரவி தாளம்: ஆதி

பல்லவி

துணை நீயே துர்க்கை அம்மா - என்றும்
அணைப்பாயே எம்மை அம்மா - எங்கள்
(துணை.........)

அனுபல்லவி

தெல்லியூர் வளர்கின்ற திருச்செல்வியே - தன்டர்
தொல்லைகள் துடைக்கின்ற அருட்செல்வியே அம்மா -
(துணை ........)

சரணம்

துள்ளும் பகையோட்டி அருள்செய்குவாய் - சூழும்
துன்பம்துயர் போக்கித் துணைசெய்குவாய் - வாடும்
செந்தமிழர் வாழ்வக் கணிசெய்குவாய் - நாடும
செந்தமிழின் ஆட்சிக் கருள்செய்குவாய் - அம்மா!
(துணை.........)

- சரவணன்.

மலர் அமைப்பு:
சுன்னுகம்
துர்க்கா
ஸ்ரேஷனேர்ஸ்


"அவள் அருள்மழைஞாலத்தை நனைப்பதாக"
**மகராசி ரெக்ஸ்**
பிரதான சந்தி, சுன்னுகம்.

'தேவியே உலகின் ஒளி நீயேயம்மா'
**கீத் மருந்தகம்**
பிரதான வீதி, சுன்னுகம்

'அன்னையின் எழிலில் அகிலம் மகிழ்கிறது.'
**திருமகள் அழுத்தகம்**
பிரதான வீதி, சுன்னுகம்.

தேவியின் கரங்கள் வல்லன எல்லாந்தரும்
**இ. சுப்பிரமணியம் அன் கோ**
கே. கே. எஸ். வீதி, சுன்னுகம்.

'துர்க்கையைத் துதிப்போம் தூய்மையடைவோம்'
**தனலக்குமி புத்தகசாலை**
பிரதான வீதி, சுன்னுகம்.

'ஜனனியின் திருவடிகளே சரணம்'
**ஸ்ரீ மேகலா ரேடேர்ஸ்**
இல. 9, கே. கே. எஸ். வீதி, சுன்னுகம்.

'தேரேறும் தேவியே போற்றி தாயே'
**ஐ. பேரம்பலம் அன் சன்**
பிரதான வீதி, சுன்னுகம்.

'பவானியைப் போற்றி பாவவினை மாய்ப்போம்'
**ஸ்ரீ முருகன் ஜுவலேர்ஸ்**
25, கே. கே. எஸ். வீதி, சுன்னுகம்.

'பூங்குழலாள் புகழ் புவியெங்கும் பரவட்டும்'
**நியூ சித்திரகலா ஸ்ருடியோ — வீடியோ**
70, 72, கே. கே. எஸ். வீதி, சுன்னுகம்.

'தேவியின் பாதத்தில் ஆனந்தமடைவோம்'
**முருகன் ஆபரண மஹால்**
டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னுகம்.

'எழில்மிகு அன்னையின் அழகினைக் காண வாரீர்'
**நீதினி-Q** டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னுகம்.

'சக்தியைப் போற்றினுல் சகல பிணியுமகலும்'
**ஹஜ பிக்சர் பலஸ்**
பஸ் நிலையம் முன்பாக, சுன்னுகம்.

'துர்க்கையைத் துதிப்போர்க்கு துயரமேயில்லை'
**ஓம் சக்தி நகைத் தொழிலகம்**
டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னுகம்.

'அபிராமியே அகிலத்தை ஆசீர்வதியுமம்மா'
**பல.நோ. கூட்டுறவுச் சங்கம்**
சுன்னுகம்.

ஜனனியே ஜெகத்தினை வாழ்த்துங்கள்'
**பொஸ்கோ** நவீனசந்தை, யாழ் நகர்.

# புலிகள் கைப்பற்றிய அதிவேக படகால் கடற்படையினருக்கு பெரும் ஆபத்து

(கொழும்பு)

இராணுவ - கடற்படை கூட்டுப் பாதுகாப்பின் கீழ் மண்டைதீவு கடற்படை இறங்குதுறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'வோட்டர் ஜெட்' என்றழைக்கப்படும் அதிவேகப் படகை விடுதலைப் புலிகள் கைப்பற்றியமை பாதுகாப்பு வட்டாரங்களில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

'வோட்டர் ஜெட்' அதிவேகக் கடற்படைப் படகு இன்று உலகின் பலநாடுகளில் கடற்படையினர் பாவிக்கும் நவீன படகாகும். சுமார் 60 அடி நீளமானது. 17 அடி அகலமானது. இந்தப்படகில் அதிசக்தி வாய்ந்த தொலைத் தொடர்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருந்தன. அத்துடன் 50 கலிபர் விமான எதிர்ப்புத் துப்பாக்கியும் பொருத்தப்பட்டிருந்தது. இதில் 2000 தோட்டாக்களும் இருந்தன.

'வோட்டர் ஜெட்' கடற்படையினர் பாவிக்கும் டோரா, டிங்கி, கன்போர்ட் போன்றவற்றைவிட அமைப்பு முறையிலும் செயலிலும் முற்றும் மாறுபட்டன. மேற் கூறிய படகுகளின் விசை, காற்றாடி இயக்கத்திலேயே தங்கியிருக்கிறது. இந்த நவீன படகு அமுக்க விசையினால் ஓடும் சக்திகொண்டது இலங்கைக் கடற்படையிடம் உள்ள படகுகள் பெரும்பாலும் பெற்றோலினால் இயங்கக் கூடியன. இப்படகு டீசலினால் இயங்கும்.

கடந்தமாதம் 27ம்திகதி இந்த வோட்டர் ஜெட் படகு மண்டைதீவு கடற்படை இறங்கு துறையில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தது. பூரண இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள இந்தப்பகுதி தீவிரவாதிகள் ஊடுருவ முடியாத அளவிற்கு பாதுகாப்பு நிறைந்த பகுதி.

புலிகள் இரவோடிரவாக சுழியோடிகளாகவந்து படகு கட்டியிருந்த கயிற்றை அறுத்துக் கடலில் தள்ளிச் சென்று பின்னர் இயக்கிச் சென்றிருப்பதாக கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 'வோட்டர் ஜெட்' படகை மற்றப் படகுகள் போல் இயக்கமுடியாது இதனை இயங்கவைக்க விஷேட பயிற்சி பெற்றிருக்க வேண்டும். மாலுமி ஒருவரால் கூட இதனை சரிவரப் புரிந்து கொள்ளாமல் இயக்கமுடியாது.

இதைப் புலிகள் எவ்வாறு இயக்கிச் சென்றார்களோ என அந்த அதிகாரி ஆச்சரியப்பட்டார். இந்தப் படகை இயக்கும் முறையைக் குறிக்கும் 'கற்லொக்கை' எப்படியோ புலிகள் பெற்று அதன்படியே மாலுமி ஒருவர் இயக்கிச் சென்றிருக்கவேண்டுமென அதிகாரிகள் சந்தேகிக்கிறார்கள்

'வோட்டர் ஜெட்' அதிவேக படகை இலங்கை கடற்படையிடம் உள்ள 'கன்போட்டோ அல்லது டோராவோ நெருங்க முடியாது. ஓட்டத்தில் அவ்வளவு சக்திவாய்ந்தது இப்படகு கடத்தப்பட்டது பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலென பாதுகாப்பு வட்டாரத்தில் அஞ்சப்படுகிறது. புலிகள் இதன் உதவியுடன் பெரும் சேதத்தை கடற்படையினருக்கு ஏற்படுத்தக்கூடும் என பாதுகாப்பு வட்டாரத்தில் அஞ்சப்படுகிறது.

இந்தப்படகை புலிகள் எப்போது தாக்குதலுக்கு பயன்படுத்தப்போகிறார்களோ தெரியாது என்கிறார் உயர் பாதுகாப்பு வட்டார அதிகாரி ஒருவர். (சி)

## விவசாயிகளுக்கு மண்ணெண்ணை

[வட்டுக்கோட்டை]

சிறுவர் பாதுகாப்பு நிதியம், தொல்புரம் சமநல சேவை நிலையப் பிரிவுக்குட்பட்ட விவசாயிகளுக்கு சங்கானையில்வைத்து மண்ணெண்ணெய் வழங்கிவருகின்றது

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தில் உறுப்பினராகச் சேர்ந்து விவசாயிகளுக்கான அட்டையை வைத்திருப்பவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 6 லீற்றர் வீதம் லீற்றர் 25 ரூபாவாக வழங்கப்படுகிறது. [139]

## விளையாட்டு போட்டி

[உடுப்பிட்டி]

இன்பருட்டி கிராம முன்னேற்றச்சங்க சனசமூக நிலையத்தின் 37ஆவது ஆண்டு விழாவும், காண்டீபன் கழக விளையாட்டுப் போட்டியும் எதிர்வரும் 11ம் 12ஆம் திகதிகளில் கழக விளையாட்டு அரங்கில் நடைபெறும்.

11ஆம் திகதி பல்யுத்தம், சைக்கில் ஓட்டம், கயிறு இழுத்தல் போட்டிகளும் 12ஆம் திகதி ஆணழகன் போட்டி உட்பட பல போட்டிகளுடன் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (150

2 அமைச்சர்களை

## பதவி நீக்க வற்புறுத்து

[புதுடில்லி]

இந்திய மத்திய அரசின் இரு அமைச்சர்களை உடன் பதவி விலகுமாறு எதிர்க்கட்சிகள் வற்புறுத்திவருகின்றன.

பம்பாய் வங்கி ஊழலை விசாரணை செய்துவரும் சிறப்பு நாடாளுமன்ற குழுவை துணை நிதிஅமைச்சர் ராமேஷ்வர் தாக்கூர் தம்வசப்படுத்த முயன்று வருவதாகவும், அடுத்து ரயில்வே அமைச்சர் பி. கே. ஜாபர்சரீப், ரயில்வேத் துறையுடன் தொடர்பில்லாத வெளியார் நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் செய்து கொண்டது தொடர்பாகவும் இவர்களை உடன் பதவி விலகுமாறு இந்தியாவின் முக்கிய எதிர்க் கட்சிகள் தற்போது வலியுறுத்தி வருகின்றன.

இந்தியப் பிரதமர் நரசிம்மராவுக்கு இது பெரும் நெருக்கடியாக இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## இன்று

(அரியாலை)

ஆனைக்கோட்டை உயரப்புலம் புனித அடைக்கல அன்னை இறுதி தினமான இன்று 8-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை புனித அடைக்கல அன்னை தேர்ப் பவனி இடம்பெறும்.

மாலை ஆராதனை முடிவுற்றதும் ஆலய முன்றலில் புனித யூதா தேயூ, பண்டார வன்னியன் ஆகிய நாடகங்கள் நடைபெறவுள்ளன. (59)

## இலக்கிய விழா

(கொழும்புத்துறை

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் இலக்கியவிழா எதிர்வரும் 11-ந் திகதி வெள்ளிக்கிழமை காலை வித்தியாலய அதிபர் கா. கணேசதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (154)

காத்தருளும்

[4ம் பக்கத்தொடர்ச்சி]

கொண்டெழுந்தருளியுள்ளஸ்ரீ துர்க்காதேவியின் ரதம் புதுமோடியிலான ''முகபத்திர வேலைப்பாடு''களுடன்அமைக்கப்பட்ட முதலாவது ரதமாகும்.

ஆதிசக்தியான ஸ்ரீ துர்க்காதேவி அக்கினி போன்ற நிறத்துடன் வீற்றிருக்க ஏனைய எட்டுத் துர்க்கைகளும் தாமரைமலர் வடிவிலமைந்த ரதங்களில் எட்டுத்திக்குகளிலும் இருந்து அருள்பாலிக்கின்றனர். எட்டுக்கோணங்களுக்கும் எட்டு சிங்கங்களை அமைத்து ஆகாயத்தைக் குறிக்கும் சிங்காசனத்தை அமைத்து அச்சிங்காசனத்தில் ஆதிசக்தியான துர்க்காதேவி வீற்றிருந்து பக்தர்களுக்குத் திருவருள் பாலிக்கின்றாள். அடியார்களின் துன்பத்தைக் களைந்து திருவருளை வழங்கி பாதுகாக்கும் தன்மையினால் துர்க்கை என்னும் நாமத்தை பெற்றவள். கொலு வீற்றிருப்பதற்கு உருவாக்கப்பட்ட புதிய ரதம் சிறப்ப அம்சங்களுடனும், பூரணபொலிவுடன் அமைந்துள்ள இச்சித்திரத் தேரில் இன்று காலை 8-30க்கு வரும் சுபவேளையில் திருவீதி உலாவந்து அடியார்க்கு ஆறுதல் தர அன்னையவள் வருகின்றாள். அவளின் திருவருள் கடாட்சம் என்றென்றும் எம் மக்கள் பக்கமாக நின்று அமைதியைத் தரவேண்டுமெனப் பிரார்த்திப்போமாக.

## ஹாட்லிக் கல்லூரி நூல்நிலைய வாரம்

தனதுவரலாற்றுக்காலமான 1838ம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து இன்றுவரை முன்னணியில் நிற்கும் ஹாட்லிக் கல்லூரி, தனது நீண்ட காலத்திலேருந்த அதிபர்கள் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரது ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்டதும், முதற்தரம் உள்ளதென வர்ணிக்கப்பட்டதுமான ஓர் நூல்நிலையத்தைக்கொண்டு வளர்ந்து வந்தது கல்லூரியின் நூல்நிலையத்தினது சிறப்பை உலகின் பல பாகங்களிலுமுள்ளோர் அறிந்து பாராட்டி வந்துள்ளனர். அதன் சிறப்பு அதிபர் திரு க. பூரணம்பிள்ளை காலத்தில் உச்சியினை அடைந்துகொடி கட்டிப்பறந்தது.

பிரித்தானிய வெளியீடான நவீன என்சைகுளோபீடியாக்களையும், கலைக்களஞ்சிய தொகுதிகளையும், காலத்துக்கேற்றபடி வெளியிடப்படும் நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், அறிக்கைகள், தொகுப்புக்கள் பத்திரிகைகளைப் பலவேறு கல்வித்துறைகளுக்கும் ஏற்றபடி எண்ணாயிரத்துக்கு மேற்பட்ட மிகச்சிறந்த நூல்கள் சேகரித்து வைக்கப்பட்ட ஓர் கலாசத்திரமாக விளங்கிய நூல் நிலையம் கல்லூரியின் ஆசிரியர்களையும், மாணவரையும் உலகறிந்த அறிஞராக படைத்துக் கொண்டிருந்தது

மாணவரது வாழ்வை விரும்பாது வாட்டவிரும்பிய ஒரு கூட்டத்தினர் எமது நூல் நிலையத்துக்கு தீமூட்டி மகிழ்ந்தனர்பலகாலமாக முன்னேற்றத்தில் நாட்டமுள்ள நலன் விரும்பிகள் பலராலும் வளர்க்கப்பட்ட நூல்நிலையம் ஒரு நாளிலே அக்கூட்டத்தினரால் சாம்பராக்கப்பட்டது 1984ம் ஆண்டு செப்டம்பர் முதலாம் திகதி எனப்பட்ட கரிநாளே அவ்வாறு நூல்நிலையத்துக்கு எரியூட்டிய கொடிய நாள்.

இவ்வாறு எமது கல்விச் செல்வத்தை எரித்த செயலை எதிர்த்துப் போராடவேண்டியது கல்லூரியின் நலனிலே நாட்டமுள்ள ஒவ்வொருவரதும் முக்கிய கடமையாகும் அதனால் செப்டம்பர் முதலாந் திகதியுடன் சார்ந்ததினங்களை நூல்நிலைய வாரம் என்று பிரகடனம் செய்து, எரிந்து சாம்பர் காணப்பட்ட இடத்தை நவீன நூல்நிலையமாக சக்தி பெற்று எழச்செய்ய வேண்டும் பழைய மாணவர் சங்கம்

ஓய்வூதியருக்கும்

## நஷ்டஈடு

(யாழ்ப்பாணம்)

கலவரங்களால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதுபோல் ஓய்வூதியர்களுக்கும் நஷ்டஈடு வழங்க அரசு கொள்கையளவில் இணங்கியுள்ளது.

மரதன் ஓட்ட

## போட்டி முடிவுகள்

(நெல்லியடி)

வடமராட்சி கோட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே கடந்த 5ம் திகதி நடைபெற்ற மேஜர் முரளி ஞாபகார்த்த 7 மைல் மரதன்ஓட்டப் போட்டியில்செல்வன்கள்: தி. விஷ்ணுகரன் கம்பர்மலை அ. த. க. பாடசாலை) செ. துளசிதாஸன் [இமையாணன் அ. த. க. பாடசாலை பா அகிலன் [வேலாயுதம் மகாவித்தியாலயம்] வி செல்வலிங்கம்(கரணவாய் பொன்னம்பல வித்தியாலம்] ஞ ரமணன் (கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்) ம. சந்திரமோகன் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்) செல்விகள்: ஆ புவிதா (செம்பியன்பற்று அ. த. க. பாடசாலை] ம. ஊர்மிளா கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்] க. யோகரஞ்சினி செம்பியன்பற்று (அ. த. க. பாடசாலை]ச. சசிகலா [கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்) ம. ரேணுகாதேவி (கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம்) ஆகியோர் வெற்றியீட்டியுள்ளனர். இவர்கள் யாழ் மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் போட்டிகளுக்குத்தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (.60]

படையினரிடம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாக அங்கு சென்று திரும்பிய கொழும்பு பத்திரிகையாளர் ஒருவர் தெரிவித்தார்.

மிகுந்த அச்சத்துடன் வாழும் இப்பகுதி மக்கள் பகலில் தமது இல்லங்களுக்குச் சென்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

விரக்தியடைந்த நிலையில் இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து விடுபடமுடியாது இவர்கள் தவிப்பதை காணக்கூடியதாகஇருக்கிறது என்றும் இவர்களில் ஒருசிலர் விடுவிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். (வி)

கடற்படையினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

விமானப் படை விமானங்களும் இப்பகுதியில் கடல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை வடபகுதி படை முகாம்களிலும் படையினர் தொடர்ந்து உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

கிழக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மானித்துள்ளது.

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் சாய்ந்த மருதுவிலும் இருகுண்டுகள் வெடித்ததை அடுத்தே பாதுகாப்பு அமைச்சு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

படையினரின் சோதனை நடவடிக்கைகளை அதிகரிக்கும் விதமாக கிழக்கு மாகாணத்தின் பல்வேறு இடங்களிலும் புதிய சோதனை நிலையங்களை அமைப்பதற்கு தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

இதேவேளையில் கிழக்கு மாகாணத்தின் அடர்ந்த காட்டுப் பகுதிகளில் படையினர் தீவிர தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தயாராக இருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

## இடமாற்ற வேலைகள்

(கொழும்பு)

பிரதேச செயலகங்களுக்கான இடமாற்ற வேலைகளை இம்மாதம் 15- திகதிக்குள் பூர்த்தியாக்குமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, சகல அமைச்சுக்களையும், திணைக்களங்களையும் இந்த இடமாற்ற வேலைகளை துரிதப்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது. [சே]

## விபத்தில் 30 பேர் பலி

(புதுடில்லி)

ஆந்திர பிரதேசத்தில் நேற்று பஸ் ஒன்று பாதை ஓரத்திலுள்ள கிணறு ஒன்றினுள் வீழ்ந்ததால் 30 பேர் வரை இறந்துள்ளனர்.

அந்த பஸ்ஸில் 60 பயணிகள் இருந்ததாகவும், 31பேர் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (சே)

வலிமேற்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் வடபகுதியின் வலிமேற்கு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளும், அகதிகளுக்கான நிவாரண வெட்டும் இலங்கை அரசாங்கத்தின் சரியான மனப்போக்கைப் படம்பிடித்துக் காட்டுவதாகவே உள்ளது.

அகதிகளுக்கான நிவாரண வெட்டை இலங்கை அரசு அமுல்படுத்துவதன் மூலம் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ்மக்களின் நலனில் அரசு எந்த அளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதையும் வெளிப்படுத்தியுள்ளது.

வடக்கு கிழக்கு பிரச்னையில் அரசு இன்றைய நிலையில் முற்றுமுழுதாக இராணுவத் தீர்வையே நம்பியிருப்பதை அரசின் இந்த நடவடிக்கைகள் எடுத்துககாட்டுவதாகவும் சர்வதேச நாடுகள் தெரிவித்துள்ளன. [இ]

# யுத்தம் முடிவடையுமாஞல் தமிழ்மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலாம்

(கொழும்பு)

''வடக்கு-கிழக்கு யுத்தம் முடிவடையுமாஞல் அப்பகுதி வாழ் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த ஐ. தே. கட்சி அரசு சகல வழிகளிலும் முயற்சியை மேற்கொள்ளும்''.

ஜனுதிபதி திரு. ஆர். பிரேமதாசா திருமலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஜனசக்தி உரித்து சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: வேலைவாய்ப்புகள் வழங்குவதற்கு குடும்பங்களின் வறுமை நிலையை முக்கிய தகுதியாக கருதிச் செயற்படுவது உலகிலேயே ஐ. தே. கட்சி ஒன்று தான் என்றும் ஜே.வி.பி. இயக்கம் துப்பாக்கி வேட்டுக்களால் சாதிக்க முற்பட்டதை ஐ.தே. கட்சி வாக்குச் சீட்டுக்களால் சாதித்துள்ளது என்றும் குறிப்பிட்டார். (ச)

## இன்று துர்க்கை அம்மன் ரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழைதுர்க்காதேவி ஆலய வருடாந்த தேர் உற்சவம் இன்றுகாலை நடைபெறும். அதிகாலை 4-30மணிக்கு உதயகால பூசையுடன் ஆரம்பமாகி 7-[illegible]0 மணிக்கு வசந்தமண்டப பூசை நடைபெறும் அம்பாள் காலை 8-30 மணிக்கு சித்திரத் தேரில் வீதியுலா வருவார்.

## இராமநாதன் நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

சேர் பொன்னம்பலம்இராமநாதன் நினைவுப் பேருரை யாழ். பல்கலைக்கழகத்தில் இன்று மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது. இந் நினைவுப்பேருரையை பொருளியல்துறை தலைவர் கலாநிதி சண்முகநாதன் நிகழ்த்தவுள்ளார். நினைவுப்பேருரையைத் தொடர்ந்து இராமநாதல் நுண்கலைக் கழக மாணவர்களின் இசை நிகழ்ச்சி நடைபெறும்.

## ரயில் விபத்து 37 பேர் பலி

(புதுடில்லி)

மத்திய பிரதேச மாநிலத்தில் நடந்த ரெயில் விபத்தொன்றில் 37 பேர் பலியாகினர் மற்றும் 75 பேர் காயம் அடைந்துள்ளனர்.

நாக்பூரிலிருந்து வந்த பிரயாணிகள் ரயில் வண்டியுடன் எதிர் கொண்டு வந்த சரக்கு வண்டிமோதியதில்இவ்விபத்து ஏற்பட்டது. [3ஜ]

## 132 பேர் தாயகம் திரும்பினர்

(சென்னை)

தமிழகத்தில் தங்கியிருந்தோரில் சுமார் 132 இலங்கை தமிழ் அகதிகள் சென்னையிலிருந்து விமானமூலம் நேற்று திருமலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்

சில உயர் அதிகாரிகளும் இவ் அகதிகளுடன் சென்றதாகக் கூறப்படுகிறது. (க)

## பயிற்சிநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து நடாத்த இருக்கும் தமிழ் / ஆங்கில மொழிகளிலான சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் பயிற்சிநெறி நாளை 09ம் திகதி புதனகிழமை மாலை 4 00 மணிக்கு செஞ்சிலுவைச் சங்க பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாக உள்ளது.

# சுவிஸ் தமிழ் அகதிகள் இத்தாலிக்கு இடம்பெயர்வு

(பேர்ண்)

சுவிஸிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் இத்தாலி நாட்டிற்கு சென்றுகொண்டிருப்பதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுவிஸிலுள்ள 1,50.000 இலங்கைத் தமிழ் அகதிகளையும் ஐந்து வருட காலத்தினுள் கட்டம் கட்டமாக திருப்பி அனுப்புவதற்கு சுவிஸ்நாட்டு அரசாங்கம் நடவடிக்கைஎடுத்துவருவதை தொடர்ந்து இங்குள்ள தமிழர்கள் தற்போது இத்தாலிக்குச் சென்றுகொண்டிருக்கிறர்கள்.

இதுவரை சுமார் 10,000 அகதிகள் சுவிஸிலிருந்து இத்தாலிக்குச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இங்குள்ள தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது சம்பந்தமாக குழுவொன்று அண்மையில் கொழும்புக்கு வந்து கலந்தாலோசனைசெய்துவிட்டு சென்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (71-ரி)

## வடக்கு கிழக்கு

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இருக்கவேண்டும். அப்பொழுதுதான் தொடரும் போருக்கு முடிவு காணமுடியும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்

வடக்கு-கிழக்குப் போருக்கு முடிவு ஒன்று ஏற்படவேண்டுமென்றே அதிகமான மக்கள் விரும்புகின்றனர். எனவே இந்தச் சூழலை ஜனுதிபதி பிரேமதாசா பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் அரசியல் அவதானிகள் மேலும் தெரிவித்தனர். (ரி)

# நீதிமன்றத்தில் பெண் கத்தியால் குத்தப்பட்டுகொலை

(கொழும்பு)

கணவனைக் கொலை செய்தாரென்ற சந்தேகத்தின்பேரில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட பெண் ஒருவர், நேற்றுக் கத்தியால் குத்தப்பட்டுப் படுகொலைசெய்யப்பட்டார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாது:

கடந்த ஆகஸ்ட் மாதம் சிதம்பரம் தர்மராஜா என்பவர் படுகொலை செய்யப்பட்டார். இக்கொலையைச் செய்ததாக, அவர் மனைவி சந்திரிகாவும், சந்திரிகாவுடன் தொடர்புடைய ஒருவரும் கைதுசெய்யப்பட்டு நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்,

ஆனல் 29 வயதான சந்திரிகா நீதிமன்றம் வந்திருந்தபோது பார்வையாளர் பகுதியிலிருந்துஎழுந்தகும்பலொன்று சந்திரிகாவைக் கத்தியால் குத்திக் கொலை செய்துவிட்டுத் தப்பிச் சென்றது. (தே)

# நிவாரணக் குறைப்பு தமிழ் கட்சி கண்டனம்

(கொழும்பு)

இலங்கை அரசு அகதிகளுக்கான நிவாரணத்தை அரைவாசியாகக் குறைத்ததற்கு, கொழும்பிலுள்ள தமிழ் அரசியல் கட்சி ஒன்று வன்மையாகக் கண்டித்துள்ளது.

இலங்கை அரசு நிவாரணத்தை முழுமையாக வழங்க முன்வராவிட்டால், மக்கள் பட்டினியால் மடியவேண்டிய நிலை ஏற்படுமெனவும் இந்த அரசியல் கட்சி தெரிவித்துள்ளது. (தே)

# அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை அறிவிக்க வேண்டும்

(கொழும்பு)

வடக்கு கிழக்குக்கான அதிகாரப் பரவலாக்கல் திட்டமொன்றை வெளிப்படையாக அறிவிக்க வேண்டியது அரசின் கடமையாகுமென்று அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

[illegible]சிறுபான்மையினருக்கு எதை வழங்குவதற்கு அரசு தயாராகவிருக்கிறதென்பதை தமிழ் மக்கள் திட்டவட்டமாக அறிந்துகொள்ளவேண்டியுள்ளதென்றும் இனப் பிரச்சினை விடயத்தில் அரசின் நிலைப்பாடு பற்றி அறியமுடியாமலுள்ளது என்றும் மேலும் தெரிவித்துள்ளார்கள்.

இராணுவ, அரசியல் தீர்வு என்னும் இரட்டைத்தீர்வுகள் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ரி)

# பகுதி நேர ஆங்கில ஆசிரியர் பரீட்சை புள்ளியிடும் வேலை ஆரம்பம்

(வட்டுக்கோட்டை)

யாழ். கல்வித் திணைக்களப் பரீட்சைப் பகுதியினர் கடந்த 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கான போட்டிப்பரீட்சை ஒன்றை நடத்தினர்.

யாழ். இந்துக்கல்லூரியிலும் யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெற்ற இப்பரீட்சைக்குச் சுமார் 510 பரீட்சார்த்திகள் தோற்றினர்.

யாழ், கல்வித் திணைக்களப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் துரை தியாகராசா தலைமையில் புள்ளியிடும் வேலைகள் தற்போது நடைபெற்றுவருகின்றன.

நேர்முகப் பரீட்சைக்கான புள்ளியும், எழுத்துப் பரீட்சைக்கான புள்ளியும் சேர்க்கப்பட்ட பின் வெட்டுப் புள்ளி அடிப்படையில் இவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (139)

## நிவாரண வெட்டை

[-1ம் பக்கத் தொடர்ச்சி]

ஆரம்பமாகவுள்ளது

நல்லூரிலிருந்து புறப்படும் ஊர்வலத்தினர் சுலோகங்கள் பதாதைகள் ஏந்திய வண்ணம் கோயில் வீதி வழியாக சென்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் மகஜரொன்று கையளிக்கப்பட்ட பின்பு அங்கிருந்து ஆஸ்பத்திரி வீதி சென்று யாழ செயலகத்தை சென்றடைந்து அங்கு ஏற்கனவே மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் மக்களுடன் ஒன்றா சேர்ந்து, யாழ். அரச அதிபரிடம் ஜனுதிபதி பிரேமதாஸாவுக்குச் சமர்ப்பிக்குமாறு மகஜர் கையளிக்கப்படும்.

இந்த ஊர்வலத்திலும் மறியல் போராட்டத்திலும் தமிழீழத்திலுள்ள தனியார், அரச, வர்த்தகத் திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்கள், கவங்கி ஊழியர்களையும் கலந்துகொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது.

இந்த வெகுஜனப் போராட்டத்தில் சகல கூட்டுறவாளர்களும், பணியாளர்களும்பங்குபற்ற வேண்டுமென யாழ் மாவட்ட கூட்டுறவுசபையும், வடபகுதி வர்த்தக ஊழியர்களும் கலந்துகொள்ளவேண்டுமென வடபிராந்திய வர்த்தக ஊழியர் சங்கமும், தீவக மக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறுஇடம்பெயர்ந்த தீவகமக்கள் நலன்காக்கும் கழகமும் அழைப்பு விடுத்துள்ளன. (ரி)

## காவல்துறை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்தமாதம் நடைபெற்ற நல்லூர் கந்தன் ஆலய உற்சவ கால நாட்களில் ஆலயப் பிரதேசத்திற்குள் காவல்துறை உறுப்பினர்களால் கண்டெடுக்கப்பட்ட நகைகள், கைக்கடிகாரங்கள், பணப்பைகள், துவிச்சக்கர வண்டித் திறப்புகள் என்பன மீளப் பெருமல் உள்ளன.

இப்பொருட்களை இழந்த அடியார்கள் தமிழீழ காவல்துறையின் குற்றப்புலனய்வுப் பிரிவில் சமுகம் தந்து தமது பொருட்களை பெற்றுக்கொள்ளுமாறு தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் பா. நடேசன் கேட்டுள்ளார்.

## வடபகுதி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இராணுவ தளபதியாககடமையாற்றிவந்த மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா எதிர்வரும் ஒக்டோபர் முதல் இராணுவ தலைமை அதிகாரியாக நியமிக்கப்படவிருப்பதையடுத்தே மேற்படி நியமனம் வழங்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதுவரை இராணுவ தலைமைப் பதவியை வகித்துவந்த பாலரட்ணராஜா இம்மாதம் முதலாம் திகதியுடன் ஓய்வு பெற்றதையடுத்தே மேற்படி நியமனம் ஜெரி டி சில்வாவுக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (க)

## பயங்கரவாதம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கரவாதம் நடைமுறைப்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜே வி பியினர் மாத்திரமல்ல, அரச எதிர்ப்பாளர் பலரும்] கொல்லப்பட்டனர்.

# மரண அறிவித்தல்

## K. K. வேலுப்பிள்ளை

காரைநகர் சிவன்கோவில் வீதியில் வசித்தவரும் கொழும்பு 74, செட்டியார் தெரு லிப்ரா ஜுவலரி ஸ்ரோர்ஸ் உரிமையாளருமான க. கா. வேலுப்பிள்ளை நேற்றுமுன்தினம் கொழும்பில் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற பார்வதியின் அன்புக் கணவரும் சரோஜினிதேவி, விமலாதேவி, செல்வராணி, கமலாம்பிகை, தனலட்சுமி, இராஜேஸ்வரி, தேவராஜா ஆகியோரின் அன்புத் தகப்பனும், செல்வராசா, சண்முகரத்தினம், பாலேந்திரா, ஜெயகிருஷ்ணனந்தசிங், கந்தசாமி, குகதாசன், யோகரஞ்சினி, ஆகியோரின் அன்பு மாமனுருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் எதிர்வரும் 10-09-92 வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறும். உற்றார். உறவினர். நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

திருமதி வி. கனகசபாபதி

913, மாவடி ரோட்,
யாழ்ப்பாணம்.

(சி-6784)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி [illegible] அச்சகத்தில் 1992-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 08ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence NumberB/10336/